செ.வெ.எண்:106/2026 நாள்: 06.02.2026

**சேலம் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

சேலம் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் காலியாக உள்ள வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மகளிர் திட்டம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டார அளவில் காலியாகவுள்ள ஆத்தூர் – 1, எடப்பாடி - 1, கொளத்தூர் - 2, மகுடஞ்சாவடி - 1, சங்ககிரி - 3, வீரபாண்டி - 2, ஏற்காடு - 2, கொங்கணாபுரம் – 1 ஆகிய 13 வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடங்களை நிரப்ப, உரிய கல்வி தகுதியுடைய நபர்களிடமிருந்து உரிய கல்வி மற்றும் இதர தகுதி சான்று நகலுடன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இப்பணியிடங்களுக்கான கல்வித் தகுதி ஏதேனும் பட்டப்படிப்பு தேர்ச்சி மற்றும் 3 மாத கணிப்பொறி (Ms Office) சான்றிதழ் தேர்ச்சி அல்லது கணினி அறிவியல் பாடத்தில் பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 30 வயதிற்குள் இருக்க வேண்டும். சுய உதவிக்குழு / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். மேலும், இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம், சுய உதவிக்குழு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சிறப்பான முந்தைய செயல்பாடு பெற்றிருப்பவராக இருக்க வேண்டும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / புது வாழ்வு திட்டத்தில் பணிபுரிந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்களாக இருக்க கூடாது.

மேலும், காலியிடம் உள்ள வட்டார பகுதியில் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள். விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபாலிலோ இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், அறை எண் 207, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் – 636 001 என்ற முகவரிக்கு 16.02.2026 க்குள் அனுப்ப வேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு**: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.